3rd November 1958]

Sri M. KALYANASUNDARAM : இரண்டு வருடத்திற்கு மேலாகியும் கூட இன்னும் அந்தத் திட்டங்கள் பரிசீலனையிலிருப்பதாகச் சொல்லு கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி உடனடியாக சிறிய சிறிய தோட்ட முதலாளிகள் வைத்திய வசதி செய்து கொடுக்க முடியாவிட்டாலும் அங்கங்கே அவர்கள் ஒன்றாகச் சேர்ந்தாவது பொதுவாக ஓரிடத்தில் ஆஸ்பத்திரியை ஏற்படுத்தி வைத்திய வசதியைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லுகிற யோசனை உள்பட அவ்வளவு பரிசீலனையும் செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

Vinayagar Temple Senpakkam

* 802 *Q*.—**Sri S. N. ANNAMALAI** (on behalf of Sri M. P. Sarathi): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேலூர்ப் பக்கம் உள்ள சேப்பாக்கம் விநாயகர் கோவில் நிர்வாக தர்மகர்த்தா என். கோவிந்தராஜ முதலியார் நியமனம் பற்றி ஏதேனும் புகார் கிடைத்ததா ?

(ஆ) அந்த ஊர் மணியக்காரர் வழங்கியதாக ஒரு பொய் பத்திரம் தயார் செய்து பதவியைப்பெற்றதாகப் புகார் கிடைத்ததா?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) Disciplinary action has been taken by the Deputy Commissioner under section 45 of the Hindu Religious and Charitable Endowments Act, 1951 and the trustee, Sri N. Govindaraja Mudaliar, has been placed under suspension pending final decision.

Sri K. VINAYAKAM : சேன்பாக்கத்திலிருக்கும் விநாயகர் கோயில் டிரஸ்டி கோவிந்தசாமி முதலியாரை நீக்கும்போது சாரதி முதலியாரை டிரஸ்டியாக நியமிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

Mr. SPEAKER : The question is out of order.

Primary Schools run by Forest Department.

* 803 *Q*.—**Sri M. P. SARATHI** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) காட்டிலாகாவினால் நியமிக்கப்படும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எத்தனை?

(ஆ) எந்த ஜில்லாக்களில் ? எவ்வளவு பள்ளிகள்?

(இ) அவைகளுக்கான செலவு எவ்வளவு?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Ten.

(*b*) North Arcot district—9 Schools.
Coimbatore district—1 School.

(*c*) The approximate expenditure incurred towards the maintenance of these schools is Rs. 28,000 per annum.